DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | பாபு சாயபு |
| Father's Name | மஜீத்கான் சாயபு |
| Village | வாணியம்பாடி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | Workshop |
| Age | 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **04.11.2025**

**EP.No.02/2025 in OS.115/2022** **ம.சா.1**

**குறுக்கு விசாரணை :–**

1. எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தில் காம்பைன்டு சுவர் இடித்து எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி மனுவினை பார்வையிட்டு சிறிது நேரம் எடுத்துக்கொண்டு எனக்கு தமிழ்தான் தெரியும் ஆங்கிலத்தில் இருப்பதால் என்னால் பார்த்துகூற முடியவில்லை என்று பதில் அளித்தார். அசல் வழக்கு எண்.115/2022ன் தீர்ப்பின் விவரத்தைகூட மனுவில் கூறவில்லை என்றால் சரியல்ல விவரத்தை கொடுத்திருக்கிறேன்.

2. சாட்சியிடம் ம.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டு கேள்விகேட்கப்படுகிறது அசல் வழக்கு எண்.115/2022ல் யார்யார் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் ஜகீர் மற்றும் சதாம் ஆகியோர் பெயரில் போடப்பட்டுள்ளது இந்த மனுவில் இதர எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்யும் செயலை வேடிக்கைப்பார்த்தார்கள் தற்போது எங்கள் இடம் எனகூறிக்கொண்டு JCB வைத்து சுவரை இடித்தார்கள்.

3. இந்த மனுவில் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் இல்லை, பின்பு அவர்கள் பிரச்சனை செய்தார்கள். இந்த வழக்கின் 6ம் எதிர்மனுதாரர் எனக்கு எதிராக வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.94/2024 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் அஜராகியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது ஆம்பூர்பேட்டை TS.No.111 விஸ்தீரணம் 980 சதுர அடிகள் சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.94/2024 சொத்தும் அசல் வழக்கு எண்.115/2022ன் வழக்கு சொத்தும் வேறுவேறு என்றால் சரியல்ல ஒரே சொத்துதான்.

4. தற்போது சாட்சியிடம் வா.சா.ஆ.1 காண்பிக்கப்பட்டு, அ.வ.எண்.115/2022ன் சொத்துவிவரத்தில் TS.No.03/2 என்று உள்ளது என்று சொன்னார் சரிதான். 6ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.94/2024ஐ 16.08.2024 அன்று தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த நிறைவேற்றுமனுவை தாக்கல் செய்த தேதி 02.12.2024 என்றால் சரிதான், அந்த வழக்கின் சம்மன் வந்தபிறகுதான் இந்த மனுவை தாக்கல் செய்தேன். 6 எதிர்மனுதாரரின் மாமா 3ம் எதிர்மனுதாரர் என்றாலும், 4ம் எதிர்மனுதாரர் 6 எதிர்மனுதாரரின் தாயார் என்றாலும், 5 எதிர்மனுதாரர் 6 எதிர்மனுதாரரின் சகோதரி என்றால் எனக்கு தெரியாது.

5. சதாம் மற்றும் ஜகீர்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் உறவினர்கள் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் JCB வைத்து இடித்ததாக நான் கூறும் தேதி எதுவும் குறிப்பிட்டுள்ளேனா என்று சொன்னால் சாட்சி தன்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்துவிட்ட தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார், பின்பு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்று பதில் அளிக்கிறார். மேற்படி விவரத்தை என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் காவல் நிலையத்தில் அளித்ததாக் கூறும் புகாரை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் கூறுவது போன்று புகார் எதுவும் அளிக்கவில்லை என்றாலும் அப்படி அளித்திருந்தால் அந்த நகலையாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

6. நான் கூறுவதுபோன்று 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எந்த ஒரு இடையுறும் செய்யவில்லை என்றாலும், JCB வைத்து சுவர் எதுவும் இடிக்கவில்லை என்றாலும் நீதிமன்ற உத்தரவு எதுவும் மீற வில்லை என்றாலும் அவ்வாறு மீறி

இருந்தால் தேதி மற்றும் ஆதாரம் கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல, அனைத்து ஆதாரமும் என்னுடைய வழக்கறிஞரிடம் உள்ளது.

7. என்னுடைய முதல் விசாரணையில் 3 முதல் 6 எதிர்மனுதாரருக்கு எதிராக நான் தீர்ப்பு பெற்றுள்ளேன் என்று தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் 1, 2 எதிர்மனுதாரர்களும் இனைத்து கூட்டாக சேர்ந்து நீதிமன்றத்தை ஏமாற்றும்நோக்குடன் தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. 6ம் எதிர்மனுதாரரர் அசல் வழக்கு எண்.94/2024 எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதால் அவரை மிரட்டி பணியவைக்கும் நோக்குடன் இந்த மனுவில் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, பிரச்சனை செய்ததால்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

8. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் 1, 2 எதிர்மனுதாரர்களின் ஆட்களோ முகவர்களோ தரப்பினரோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. அப்படியுள்ளபோது 3 முதல் 6 எதிர்மனுதாரர்களையும் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கப்பட்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற தீர்ப்பை மதிப்பவர்கள் என்றாலும் அவர்களுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

***(குறுக்கு விசாரணை முடிவுற்றது, மறு விசாரணை இல்லை)***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI
Date: 2025.11.28 17:27:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.